# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்


பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 துலை (24-10-1987) -அக்-நவ- 85 காசுகள் (இதழ் எண்: 93)


# விடுதலைப் புலிகள் பணியக் கூடாது!

## கருவிகளை எக்காரணம் கொண்டும் ஒப்படைக்கக் கூடாது!

## தமிழினத்தின் இறுதிப் போர்தான் தமிழீழப் போர்! எனவே இதில் தமிழர்கள் பின்வாங்கக் கூடாது!




தமிழீழத்தில் இப்பொழுது விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் நடைபெற்று வரும் போராட்டம் அன்று, போர், தமிழீழத்தின் விடுதலைக்காக மட்டும் நடைபெறுவதாக நாம் நினைக்கவில்லை. தமிழினத்தின் விடுதலைப் போரே இஃது என்றே கருத வேண்டியிருக்கிறது.

ஒப்பந்தம் என்னும் பெயரால், இந்தியஅரசு கரவாக, சிங்களவர்கள் தமிழர்கள் மேல் தொடுத்த போராட்டக் கருவியை வாங்குவது போல், போராட்டத்தையே தாங்கள் கையிலெடுத்திருக்கிறார்கள். மற்றபடி அமைதி ஒப்பந்தம் என்றால் படையெதற்கு, படைக் கருவிகள்தாம் எதற்கு?

மேலும் இருதரப்பினர்க்கும் ஆன ஒப்பந்தம் என்றால், இருதரப்பினர்க்கும் நிறைவளிக்கக் கூடிய வகையிலன்றோ அதனுடைய நடைமுறைகள் இருத்தல் வேண்டும். அதில் இரு தரப்பினரும் அன்றோ கையெழுத்திட வேண்டும். ஞாயம் தீர்க்கப் போனவனும், போராடிக் கொண்டிருப்பவர்களில் வலியவனும் மட்டுமே உடன்பாடு செய்து கொண்டால், அஃது அமைதி ஒப்பந்தமாக இருக்க முடியாது; மெலியவனை ஒழித்துக்கட்ட வலியவனுக்குத் தரும் ஆதரவு ஒப்பந்தமாகத்தான் இருக்க முடியும். எனவேதான் இதில் குந்தகம் விளைந்தது. விளைந்த

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இலக்கியப் பார்வை...

தோழர்களே,

தோழர் குணா 'தென்மொழி'யில் எப்படி இலக்கியம் படைத்தல் வேண்டும் என்ற தம் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். 'செகாவ்' சிறுகதைகளை நாம் படித்தல் வேண்டும். அவை தரும் பார்வை, நமக்கு நம்மின விடுதலைக்கான உந்துதலை வழங்கும்.

திருமண ஏற்பாடு பற்றிய ஒருகதை செகாவ் எழுதியது படித்தேன், அக்கதையில் 'திருமணம்' செய்ய விரும்பும் இளைஞனை வரவேற்கும் 'மணமகளி'ன் தந்தை அவனைப் பாராட்டி மகிழ்கிறார். மகளைச் சந்தித்துப் பேசச் சொல்கிறார். திருமணம் ஆகப்போகும் இவ்விளம் இணைகள் -உரையில் தங்களின் பரம்பரைச் சொத்து பற்றிய பேச்சு வருகிறது. அதில் ஒரு சிறிய துண்டு நிலம், யாருக்குச் சொந்தம் என்ற காரசாரமான சண்டைக்குக் காரணமாகி விடுகிறது. இந்தச் சண்டை முற்றி முரியும் வேளையில் தந்தை வருகிறார். இவரும் மகளோடு சேர்ந்து பரம்பரைப் பெருமையடித்துக் கொள்கின்றார். முரண்பாடு தீவிரப்படுகிறது.

மறுபடி அவன் மணம்பண்ண விரும்பி வந்தவன் என்றறிந்ததும் 'மணமகள்' ஆக வேண்டியவள், தந்தைமேல் தன் கவனத்தைத் திருப்புகிறாள்! மறுபடியும் இளம் இணைகள் சந்திப்பு. பேச்சு 'யார் வீட்டு நாய் உயர்ந்த சாதி' என்பதில் திரும்பி, இருவரும் சண்டை கட்டுகின்றனர்!! 'மணமகனி'ன் விருப்பப்படி 'துண்டுநிலம்'— 'உயர்ந்த சாதி நாய் எது' என்கிற தீர்ப்பு கிடைக்கிறது, முடிவில்!

சொத்துரிமை, பரம்பரைப் பெருமை, ஆணுக்குப் பெண் கீழ் என்ற கருத்து நீடிப்பு யாவும் கதையில் பொலிவாக வெளிப்படுகின்றன.

இப்படி நாமும் தமிழின விடுதலைக்கான கூறுகளை எளிய நடைமுறை வாழ்விலிருந்து கண்டு கொண்டால் ஆயிரம் கதைகள் எழுத முடியும். ஆயிரம் 'செகாவ்கள்' தமிழ் நாட்டில் காணக் கிடைப்பார்கள்!

தோழர் குணாவின் ஆர்வம் - விருப்பம் நிறைவேற, நமது 'விடுதலை' அரசியல் போராட்டம் வளர்தல் வேண்டும். அப்போது தோன்றும் கலைகள், நமது போராட்டப் படைகளை எழுச்சியூட்டிப் பீடு நடை போடப் பண்ணும்.

இன்று நமக்குக் கிடைத்துள்ள பாவலரேறுவின் படைவரிசையில் அத்தகைய வளர்ச்சிக்கான தோற்றங்களைக் கண்டு வருகிறோம். அத்தகு வளர்ச்சி, நம் தேசிய இன விடுதலைக்கான அரசியல், பொருளியல் பயிற்சியின் வளர்ச்சியில் அமையும். நம்புக!

—பறம்பை அறிவன்

# தாழ்த்தப்பட்டவர் உயர்த்தப்பட்டார்-எப்படி?

பள்ளன், தேவேந்திர குலவேளாளன் ஆனான். குறவன், குறிஞ்சி வேளாளன் ஆகிறான். பறையன் அருந்ததி மரபாகிறான். கள்ளன், அகம்படியன், மறவன் மூவேந்தன் ஆகிறான். இப்படிச் சாதிகள் 'உயர்த்தப்பட்டு விட்டன' இனிக் கீழ் சாதி, மேல் சாதி இல்லை. அப்படித்தானே.

'சாதிகள் இல்லையடி' என்றதும் மகிழ்ச்சி பறக்கிறது. சிலருக்கு மனத்துயரம் பிறக்கிறது. 'சலுகை' கூடாது சண்டையும், சலுகை எங்களுக்கும் வேண்டும் என்ற சண்டையும், 'மதம் மாறுவோம்' மிரட்டலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐயோ அப்படிக் கேட்காதீர், போகாதீர் என்ற வேண்டுகோளும், அதிகார நடவடிக்கையும் ஒருபக்கம் நிகழ்கின்றன!

28-4-'84 தினமணி இதழில் 'ஆமதாபாத் மேயராக அரசின் தேர்வு' பெற்ற செய்தி வருகிறது. செகதாலால் பராமர் முதன் முதலாக அரசின் மேயராகி வாலாற்றில் இடம் பெறுகிறார்! ஆமதாபாத் மாநகராட்சி வரலாறு படைக்கிறது. அங்கே 37 ஆண்டுகட்குப் பிறகு ஒரு பிரிவு மூச்சுவிட்டதைக் கண்டு வியப்படையலாம் தான்.

அதேவேளை, அதேநாள் செய்தியில் சில மனத் துயரங்களையும் பார்க்கிறோம்.

அரிசன ஊழியரின் 'ஏழுநாள் குழந்தை சாவு பற்றி' உசாவும்படி மாவட்ட ஆட்சியாளர் கட்டளையிட்டுள்ளார். கட்சிமாறல்கள் தொடர்பாக அரிசனங்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதாக ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனி - திருவில்லிபுத்தூரில் முறை கூறியுள்ளார். சாதிக்கு வேட்டு வைத்துச் சமர் புரிந்த பாரதிதாசன் பிறந்த நாளை அரசு கோவையில் கொண்டாடும் கோலம் விளம்பரம் வேறு இதழில்! நம் நாட்டின் இந்த அவலம் தீர வேண்டாமா? சிந்தியுங்கள்! சிந்திப்போம்!

தென்காசியில் தீண்டாமை நீக்கம் தீவிர இயக்கமாக உள்ளது. அ்'து, அரிசனுக்குத் தனிக் குடியிருப்பு (காலனி) அமைப்புக் கூடாது என்று கோரியுள்ளது. இது அரிசன சிக்கல் தீர்வு இன்னும் தொடக்க நிலையில் உள்ளதை உறுதிப் படுத்துகிறது. எப்படி இருக்கிறது நிலைமை! எண்ணுங்கள்!

—பறம்பை அறிவன்.

**எந்தக் காலத்துக்கும்**
**தில்லி ஆட்சியாளர்களால்**
**தமிழினத்துக்கு விடிவு கிடைக்காது!**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

குந்தகத்தை இப்பொழுது மெலியவன் மேல் போட்டு விட்டு, ஒப்புரவு செய்ய வந்தவன், வலியவன் கையிலுள்ள கருவியை வாங்கிக் கொண்டு, பற்றாத தற்குத் தானும் தன் கருவிகளைக் கொண்டும் அடக்கி, ஒடுக்கி, அழிக்கின்ற முயற்சியே இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தியப் படையின் முற்றுகையாகும்.

***இதை வெறும் அமைதி முற்றுகை என்று மட்டும் சொன்னால் போதாது. தமிழினத்தின் இறுதிப் போர் என்றுதான் சொல்ல வேண்டும்! எனவே இதில் தமிழினத்தின் சார்பில் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு போதும் பின் வாங்கக் கூடாது.***

ஒரடி பின்வாங்கினாலும் அத்துடன் தமிழின விடுதலை முயற்சிகள் அத்தனையையும் குழியில் போட்டு மூடி மேடை கட்டி விடுவார்கள். அத்தகைய திட்டத்துடன்தான் இராசீவின் இந்தியப் படை இலங்கையில் நுழைந்துள்ளது.

***செயவாத்தனேவுக்கு ஆதரவாக இருக்க, இன்னுஞ் சொன்னால், செயவர்த்தனேவுக்காகத் தான் போர் செய்து தமிழினத்தை அழிப்பதற்கே படை! அமைதி ஏற்படுத்துவதற்காக அன்று. அமைதிப்படை என்பது உலகத்தின் கண்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்திய கறுப்புத் துணியே!***

**இராசீவ் பார்ப்பனன்** தமிழர்கள்மேல் நேரடியாகப போர் தொடுக்க முடியாது; இப்படிச் சுற்றி வளைத்துத்தான் போர் தொடுக்க முடியும்; அழிக்கவும் முடியும். இல்லா விட்டால் தமிழர் எழுச்சியை அடக்கிவைக்கவும் முடியும்.

எனவே இதைப் போராட்டம் என்று சொல்லி விட முடியாது; ஒட்டுமொத்த, தமிழினத்தின் மேல் தொடுத்த போர் என்றே சொல்ல வேண்டும்.

***ஆம், தமிழீழ விடுதலைக்காக மட்டும் இது நடைபெறவில்லை. தமிழினத்தின் விடுதலைப் போரே இது!***

***இப் போரின் முதல் படைத்தலைவனே பிரபாகரன்! அடுத்தடுத்துப் பிரபாகரன்கள் இனிமேல் தான் தோன்றுவார்கள்.***

எனவேதான் தமிழினமே அழிந்தாலும் சரி; அபலானுக்கு அடிமைப் பட்டு இனி தமிழினம் வாழ்த்திருக்கக் கூடாது!

வாழ்க்கைக்காகப் பகைவனிடம் பணிந்தும் குனிந்தும் உரிமைகளைப் பறிகொடுத்தும் பிழைப்பதை விட, வீரத்தின் காலடியில் உயிர் துறப்பதே மேல்!

காலத்தால், வஞ்சகர் (துரோகி)களும், காட்டிக் கொடுக்கும் ***சிதம்பரங்களும், பழனியாண்டி***களும், வீடண, சுக்ரீவன்களாக அழிந்து விடுவர்!

ஆனால் ***பிரபாகரன்***களும், ***தீலீபன்***களும் அழிய மாட்டார்கள்! அழியாப் புகழ் பெறுவார்கள்!

தமிழர்களை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் இந்திய அரசின் கரவான எண்ணங்களை, சூழ்ச்சியான நடவடிக்கைகளை இத்தமிழின மக்கள் இன்னும் உணரவில்லை. அதனால்தான் நாம் அவர்களுக்கு உண்மையை உணர்த்த இத்தனைப் பாடுபட வேண்டியிருக்கிறது; இத்துணையும் எழுத வேண்டியிருக்கிறது. பார்ப்பனர்கள் நடத்துகின்ற செய்தித்தாள்களும் சரி - நம்மவர்கள் நடத்தும் செய்தித்தாள்களும் சரி, பிணத்தின்னிக் கழுகுகளுக்ுச் சார்பாக நடந்து கொள்ளும், பணந்தின்னி நரிகளாகவே, உண்மையான செய்திகள் வெளிவராமல் பொய்ச் செய்திகளையும், புளுகு முட்டைகளையும், கற்பனைக் கதைகளையும் வெளியிட்டு, இங்குள்ள மக்களைக் குழப்புகின்றன. வானொலி, தொலைக்காட்சி அனைத்திலும் இந்திய அரசுக்குச் சார்பாகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவுமே செய்திகளையும் படங்களையும் சொல்லியும் காட்டியும் வருகிறார்கள்.

புலிகளின் போராட்டத்திற்கும் தமிழீழ மக்கள் ஆதரவில்லை என்பதும், பெண்களையும் குழந்தைகளையும் முன்வைத்துப் புலிகள் போராடுகிறார்கள் என்பதும் பச்சைப் பொய்! விடுதலைவேகம் கொண்ட உண்மையான வீரத்தை இழிவுபடுத்தவும் களங்கப் படுத்தவும், மாசுறச் செய்யவும், பொது மக்களுக்கு அவர்களிடமுள்ள ஆதரவையும் இரக்கத்தையும் குறைக்கவுமே இந்திய அரசும் சிங்கள அரசும் கட்டிவிடும் கதைகளும் கற்பனைகளுமே ஆகும், அவை. அவைபற்றி இந்திய அரசு ஒரு சான்றையுமே காட்டமுடியாது.

அங்குள்ள பொதுமக்களுக்கு உதவுவது போலவும், உணவளிப்பது போலவும் படம் பிடித்துத் தொலைக் காட்சியில் காட்டிப் பெருமைப் படும் இந்திய அரசு, புலிகளின் எந்த நடவடிக்கையையும் ஏன் படம் பிடித்துக் காட்டவில்லை? இதற்கு மாறாக அவர்களிடம் இருந்த செய்தித் தாள்களையும், தொலைக்காட்சி, வானொலிக் கருவிகளையும் அழித்ததுடன், தானும் அவர்களைப் பற்றிய எந்த உண்மையான செய்தியையும் வெளியிடுவதில்லை.

நம்மிடமும் உண்மையான — போதுமான - செய்திப்பரப்புக் கருவிகளும் இல்லை. இருக்கின்ற ஓரிரண்டு செய்தித் தாள்களையும் அரசு மிரட்டியும், அச்சுறுத்தியும், அவர்களுக்குச் சார்பான, வலியூட்டக் கூடிய செய்திகளையே வெளியிடச் செய்கிறது. இவற்றால் பொதுமக்களுக்குப் போதிய உண்மை தெரிய வழியில்லை.

இங்கிருக்கும் காசுக்கு மலந்தின்னும் பச்சைத் திருடர்களும, வஞ்சகர்களும், காட்டிக் கொடுப்பான்களுமாகிய அரசியல் புரட்டர்களும் புலிகளுக்கு எதிராகவும், அரசுக்குச் சார்பாகவுமே நடந்து

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இந்தியனும் தமிழனும்!

இந்தி பேசும் இந்தியனும் தமிழ்பேசும் தமிழனும் மொழியால் இனத்தால் நாட்டுச் சூழலால் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர். அவர்களைப் பாகுபாட்டுடனேயே ஒட்டு மொத்தமாக ஒன்றிணைத்து ஆளும் இந்த இந்தியாவில் உள்ள அனைத்துத் துறைகளிலும் ஏற்றத் தாழ்வுகள் உண்டு. இங்கு மாந்தன் பிறந்து, வளர்ந்து, இறக்கும் வரை அவனுக்குத் தேவையான - அவன் காணும் அனைத்துப் பிரிவிலும் ஏற்றத்தாழ்வு நிலைகள் இந்தியாவிலே தவிர உலகெங்கணும் தேடினாலும் இவ்வளவு சரியாகக் காணமுடியாது.

இவ்வாறான இந்தியாவில் இந்தி பேசும் மக்களினத்தின் இயக்கமும் அதேநிலையில் தமிழ்பேசும் மக்களின் இயக்கமும் வேறுபாடானவை; வியப்பானவை.

மொழி, இனம், நாகரிகம், பண்பாடு, கலை, பொருளியல், குமுகாய அமைப்பு, அரசியல், கல்வி, நாட்டுரிமை இவ்வாறு பல நிலைகளை எடுத்துக் கொண்டாலும் இரு பிரிவினரும் எவ்வாறு வேறுபட்டு இயங்குகின்றனர் என்பதை ஒரு கோணத்திலிருந்து பார்க்கலாம்.

**மொழி:**

இரண்டு இந்திக்காரர்கள் சந்தித்துக் கொண்டால், அ’து உலகின் எந்த மூலையாக இருந்தாலும், இந்தியில் உரையாடுகின்றனர்.

தமிழர்கள் இருவர் தமிழ் நாட்டிலேயே சந்தித்துக் கொண்டாலும் சிறிது படித்திருந்தாலும் போதும் ஆங்கிலத்தில் பேசுவது மதிப்பு என்று கருதுகின்றனர். பிற மாநிலங்களிலோ, நாடுகளிலோ தமிழர் என்ற மொழியடையாளத்தைக் காட்டிக் கொள்வதேயில்லை

மொழியை அடிப்படையாகக் கொண்டு நடத்தப் பெறும் கலை நிகழ்ச்சிகள் எதுவானாலும் இந்தியில் நடத்தி மகிழ்கின்றனர். ஆங்கிலத்தை அறவே தவிர்த்துக் கூடியவரை இந்தியில் நடத்த விரும்புகின்றனர். காட்டாக நாடகம், இசை நிகழ்ச்சி மற்றும் பொது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கலப்பற்ற இந்தியில் நடத்துவதைக் காணலாம்.

தமிழ் நாடகம் என்ற பெயரில் நடத்தப்பெறும் நாடக நிகழ்ச்சிகளில் பிறமொழித் தாக்கம் அதிகமாகவே உள்ளது. ஆங்கில உரையாடலைத் தமிழில் எழுதி நடிப்பதாக அடிக்கடி தோன்றும். தமிழ்நாட்டில் நடத்தப் பெறும் இசை நிகழ்ச்சிகளில் தெலுங்கே மிகுதியாக ஒலிக்கிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தாய்மொழியை மிகுதியாகப் பின்பற்றுவதேயில்லை.

தங்களின் மகிழுந்துகளில், தங்கள் ஊரில் ஓடும் பேருந்துகளில் கூட பதிவு எண்களைத் தாய்மொழி இந்தியிலேயே எழுதிக் கொள்கின்றனர். இந்தித் தாளிகையில் விளம்பரங்கள் தவிர்த்து அனைத்து எண்களையும் எழுத்துகளையும் இந்தியிலேயே எழுதுகின்றனர். சில தாளிகையின் பெயர்களைக் கூட இந்தி தெரியாதவர்கள் அவற்றைப் பார்த்துத் தெரிந்து கொள்ள இயலாது. ஆங்கிலத்திற்குப் பகரமாகத் தங்கள் மொழி திகழவேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர்.

தப்பித் தவறி ஒருவர் தாம் எழுதும் மடலில் தமிழெண்ணைப் பயன் படுத்தி விட்டால் மொழி வெறியர் என்ற பட்டத்தைப் பெற்றுக்கொள்வார். தமிழ் மொழியின் தனித்தன்மையான பல உயர்வுகளைப் புரிந்து கொள்வதுமில்லை. அதைப் பிற மொழிகளோடு ஒப்பிடுவதில் தாழ்வு மனப்பான்மையோ மிகுந்துள்ளது.

தங்கள் படிப்பைத் தாய்மொழியில் முடிப்பதற்கு விரும்புகின்றனர். சிறு வகுப்பு முதல் பட்ட மேற் படிப்பு, ஆய்வுப்படிப்புகள் வரை தாய்மொழியைப் பயிற்று மொழியாகக் கொள்கின்றனர். இதற்குத்தக அங்குள்ள கல்வித் துறை அதிகாரிகளும் அதற்கு ஆவன செய்து இந்தியை ஆய்வுப் பட்டம் வரை கொண்டு வந்து ஏந்து செய்துள்ளனர்.

தமிழில் படிக்க அரசு ஏந்துசெய்து கொடுத்துள்ளது. நூல்கள் வாங்கித் தருகிறது, ஆனால் அதில் அதிகமாக யாரும் சேர விரும்பாமல் இருக்கிறார்கள். ஆங்கிலப் பயிற்று மொழியையே விரும்பி எடுப்பதுடன் அதை ஒரு பெருமையாகவும் கருதுகின்றனர். அவ்வாறு ஆங்கிலத்தில் படிக்க வாய்ப்பில்லாத போது மனக்குறையுடன் தமிழில் சேருகின்றனர். அவ்வாறு தமிழைப் பயிற்று மொழியாக எடுத்த பின்னர் அதை வெளிப்படையாகக் கூறவே வெட்கப்படுகின்றனர்.

தங்கள் கையொப்பங்களைப் போடும்போதோ பெயர்களைக் குறிப்பிடும் போதோ ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்ற கட்டாயம் இல்லாத வரை இந்தியிலேயே எழுதுகின்றனர். தங்கள் தலைப்புஎழுத்து(Initial)களையும் இந்தியிலேயே எழுதுகின்றனர்.

இதற்கு நேர்மாறாகத் தமிழிலேயே தங்கள் பெயர்களை எழுதவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படாதவரை, தங்கள் கையொப்பங்களைக் கூட ஆங்கிலத்திலேயே இடுகின்றனர். அவ்வாறு தப்பித் தவறி ஏதாவது ஒருசில இடங்களில் தமிழில் போட நேர்ந்தாலும் தங்கள் தலைப்பெழுத்தை ஆங்கில எழுத்தால் குறிப்பது மிகவும் இயல்பான நடைமுறையாக உள்ளது.

—தொடரும்

Scanned with CamScanner

# அரப்பா நிலத்தில் வாழ்ந்த மக்களின் நிலை (Reading the Mind of the Harappans.)

முனைவர். எச். டி. சங்கலியா
தொல் வரலாற்றுப் பேராசிரியர்

ஈராசு - மொகஞ்சதரா, அரப்பா ஆய்விலேயே 20 ஆண்டுகளுக்கு மேல் செலவிட்டார். தம் ஆய்வு நூலான Studies in Proto Indo - meditrerranean Culture முழுவதுமாக இந்தியா, மெசப்பட்டோமியா இட்டைட்டு, எகிப்து, மினோன் இவற்றின் வரலாற்று முந்தைய சிறு ஆய்வும் தொல் வரலாற்று ஆய்வுமாக இருந்தது.

ஈராசின் ஆய்வுகள் சிந்து, சுமேரியா நாகரிகத்தில் கலை மற்றும் சமயத்தை முதன்மையாகக் கொண்டு ஆயப்பட்டதாக இருந்தது. அவர் கண்ட ஒரு செதுக்கத்தில் காலை மடக்கி அமர்ந்த ஓர் உருவத்தைச் சுற்றி விலங்குகள் செதுக்கப்பட்டிருந்தன. அதன் தலைப்பில் இருந்த எழுத்து வடிவத்தை **'ஆண் நந்து வாழ்க்கை குடமீன் அது ஆண்'** என்று படித்தார். அதன் பொருளாக அவர் கூறியது, 'குடத்து நீருக்கும் அதில் உள்ள மீனுக்கும் உள்ள நிலையே அதன் தலைவனுக்கு உள்ள வலிவு மெலிவாகும். (The Lord of Water - Jar and of the fish is weakening and strenthening of the Lord)' மேலும் அவரின் வலியுறுத்தும் விளக்கமே 'ஆண்' என்று தலைவனைக் கூறும் கடவுள் திரவிடர்களிடத்தில் தோன்றி சுமேரியத்திலும் நடுத்தரை நாகரிகம் வரை பரவியுள்ளது என்று அவர் நூலில் கூறுகிறார்.

ஐயமில்லாமல் அவரின் ஆய்வு வியப்பிற்குரியது என்று எளிதில் கூறலாம். ஆனால் இவரின் முழு உழைப்பையுமே ஏற்றுக் கொள்ள இயலாது. ஏனெனில் அவரின் பார்வைகளும் கொள்கைகளும் பல இடங்களில் மெசப்பட்டோமியாவையும் மற்ற நாகரிகங்களையுமே குறித்து எழுதப்பட்டவையாக இருந்தன.

எனவே ஈராசு தந்தையின் ஆய்விற்கு புதிய அணுகு முறை தேவைப்பட்டது. எசு. ஆர். ராவ் என்பவர் இதனுடன் புதிய கருதுகோள்களை இணைத்து 'முந்தை பிராமி எழுத்துகள்' என நிறுவ முயன்றார். ஆனால் அவரின் பார்வை ஆரியரல்லாத நாகரிகமன்று என்பதே.

கடந்த நூற்றுண்டுகளாக சர். இலியர்னார்டு உல்லியின் 'ஊர்' என்ற செருமானிய வார்கா பகுதி அகழாய்விலும், பேரா. செட்டோன் இலாயட்சின ஈரான் அல்லது மெசப்பட்டோமியா விலுள்ள அசுறு ஆய்விலும் படிப்படியாக கி.மு. 5000 வரை அந் நாகரிகம் செல்கிறது. எவ்வாறாயினும் ஈராசின் ஆய்வில் இந் நாகரிகங்கள் தென்னிந்தியாவிலிருந்து சென்றவாக வழிமுறைப்படுத்தப் படுகின்றன. ஏனெனில் இந் நாகரிகங்கள் திரவிடர்களுடையவை என்பது ஈராசின் முழுக் கருதுகோளாகும். ஆனால் அவரின் வெளியீட்டுக்கு 25 ஆண்டுகளுக்குப் பின்னும் அவரின் கோட்பாட்டை உறுதிப் படுத்துவதாக எந்த ஒரு வெளியீடும் வெளிவரவில்லை. அதே நேரத்தில் எதிர் நிலையாக மேற்காசியாவிலிருந்து சில தொல் பொருள் ஆய்வுகளில் துருக்கியின் 'காட்டல் உயக்' (Catal Huyak) என்ற பகுதி பழைய நகரை கரி - 14 ஆய்வின்படி அது கி. மு. 6000 என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந் நிலையில் ஈராசின் கருதுகோளின்படி சிந்து நாகரிகம் திராவிடர்கள் அல்லது அவர்களின் முன்னோர்களாகவிருக்கும் நேரத்தில் தென்னிந்தியாவை அவர்கள் தோற்றிடமாகக் கொண்டிருக்க முடியாது என்ற கருத்தும் சில இடங்களில் நிலவியிருந்தது. பல அறிஞர்களின் கருத்து வழிப் பார்க்கையில் திராவிடர்களின் முன்னோர்கள் தென் ஈராகவும், ஐரோப்பியப் பகுதிகளாகவும் இருக்கலாம் என்ற கருத்திற்கும் இட மேற்படுகிறது. இவ்வாறிருக்கையில் ஈராசின் கருத்துப்படி சிந்து வெளி நாகரிகம் திராவிடர்களுடையது என்பது நிறுவப் படுகிற போது அவர்களின் நாகரிகம் பண்பாடு தென்னிந்தியாவில் எவ்வாறு எட்டியது என்பதை விளக்கத் தேவையுள்ளது.

**கணிப்பான்கள்**

மாந்த ஆற்றல் ஓர் எல்லைக்குமேல் சிந்து குடியுரிமை பற்றி ஆய்வதில் தோற்றுப்போகும் போது கணிப்பொறி எனகிற எந்திர - மின்னணு மூளை உதவுமா? இந்த ஈடற்ற பொறி குறிப்பிட்ட வழியில் புள்ளி விளக்கங்களைக் கொடுக்கும் போது மிகவும் பயன்படுகிறது. முதலில் உருசியர்களும், பின் பின்லாந்தினரும் கணிப்பொறி வழி வகைப் படுத்தினர். 1970-72 முதல் பட்டியல் வெளியிடப் பட்டது. அதில் படவெழுத்துகள் என்னவற்றைக் குறித்தன என்பதை அறிய உதவியாக இருந்தது.

ஒரு சொல்லிற்கு எழுத்துகளை இடமிருந்து வலமாகவா, மேலிருந்து கீழா, எந்த வரிசையில் படிப்பது என்ற நெறி முறையில் படிப்பது என்பதற்கெல்லாம் கணிப்பொறியால் கணிக்க இயலாது. இதைப் பொறுத்தவரை இந் நெறி முறைகளை ஐ. மகாதேவன் வகுத்துதவினார்.

அது மட்டுமல்லாமல் இந்தியாவிலும், வெளி நாட்டிலும் கிடைக்கக் கூடிய முத்திரைகள்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# ஆழ்கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டை மீட்போம்!

நினைக்கவே நெஞ்சமெல்லாம் பதறுகிறது! எங்குப் போய் யாரிடம் சொல்வது?

இந்த அதிகார வெறியர்களின் வெறித்தனத்தாலும், பணக்கொழுப் பெடுத்துக் திரியும் பண முதலைகளாலும் தமிழ் நாடு — 'பஞ்சப் பராரியாக'வே மாறிவிட்டது.

தமிழ்நாட்டு மக்கள் அன்றுடம் கஞ்சிக்கோ, கூழுக்கோ மட்டும் அன்று, தண்ணீருக்கே நாய் படாதபாடு பட்டுக் கொண்டுள்ளனர்.

கண்ட கண்ட தண்ணீரைக் குடித்து விட்டு எங்குப் பார்த்தாலும் கக்கற் கழிச்சல் (காலரா), குடற் காய்ச்சல் (டைபாய்டு)— இப்படி நோய்கள் தமிழ் நாட்டைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டன.

நாளும் உழைத்து ஓடாகிப் போன தமிழர்கள், இன்று நிலம் போலக் காய்ந்து கருவாடாகிக் கொண்டுள்ளனர்.

எங்கும் வறட்சி; நீரில்லை; காய்ந்த நிலத்தின் மீது தங்களைக் கிடத்திக் கொண்டுள்ளனர் மக்கள்.

ஏன் திடுமென இந்த வறட்சி?

எப்படி இத்துணைக் காலமில்லாமல் இப்படி வந்து சேர்ந்தது?

உடலுக்கு நோய் வருவதற்குக் காரணம் இருப்பது போல், இந்த நிலத்திற்கு இன்று கண்டுள்ள வறட்சி நோய்க்கும் காரணங்கள் உண்டு.

அக் காரணங்கள் நீக்கப் பட்டாலொழிய இந்தத் தமிழ் நாட்டில், மீண்டும் வளமான — காவிரி, வைகை, பாலாறு, தென்பெண்ணை, தாமிரவருணிகளில் நீர் ஓடப் போவதில்லை.

அப்படி என்றால் இந்த நிலத்தைச் சரிப்படுத்த என்ன நாம் செய்ய வேண்டும்?

O நிலத்தை வறள வைக்கவும், நீராவிப் போக்குக்கு உதவாமலும், தாளாலை (காகிதத்) தொழில் வழி முதலாளிகளின் பணத்திற்கென வளர்ந்து நிற்கிற யூக்லிப்டசு, சீமைக் கருவேலன் மரங்களை வெட்டி வீழ்த்துதல் வேண்டும்.

O இம் மரங்கள் நடப்பட்டதன் வழி திட்டமிட்டுத் தூர்க்கடிக்கப்பட்ட குளங்கள், ஏரிகளை மீண்டும் ஆழப்படுத்தி வெட்டி, மழைக் கால நீரைப் பிடித்துத் தேக்கிப் பயன்படுத்த வேண்டும்.

O மழைக்கு உதவக் கூடிய நல்ல பழம் தரும் மரங்களையும், நீராவிப் போக்குக்கு அதிகம் உதவக் கூடிய நிழல் தரும் மரங்களையும் நடுதல் வேண்டும்.

O தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களுக்கு மட்டும் அல்லாமல், இந்தியாவில் உள்ள மற்ற நகரங்களுக்கும் மரங்கள் இங்கிருந்து வெட்டப்பட்டு அனுப்பப்படுகிறன.

மேலும் ஏராளமான செங்கற் சூளைகளுக்காகவும் மரங்கள் வெட்டப்படுகின்றன. (தமிழ் நாட்டிலிருந்துதான் அதிக அளவில் செங்கற்கள் இந்தியாவிற்கு அனுப்பப்படுகின்றன.)

—இந் நிலைகளைத் தடுக்க தமிழ்நாடு தன்னிறைவுக்குத் தேவையான செங்கற்களைச் சுடுவதற்கும், மரங்களை வெட்டுவதற்கும் மட்டும் இசைவளித்தல் வேண்டும். அதிகமாகச் செய்வதை மக்களே தடுத்து நிறுத்துதல் வேண்டும்.

O மேலும் நல்ல விளைச்சல் நிலங்களில் கட்டடங்கள், வீடுகள் கட்டுவதைத் தடைசெய்தல் வேண்டும்.

O நல்ல வளமான பகுதிகளில் தொழிற் சாலைகளைக் கட்டுவதலால், கழிவுநீர்கள் நிலத்தைப் பாழடிக்கிறது.

— எனவே தொழிலகங்கள் அனைத்தையும் கடற்கரைப் பகுதிகளுக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

O அனைத்திற்கும் மேலாக,

ஆறுகளில், ஏரிகளில், குளங்களில் நீரில்லை என்கிற காரணத்தினால், நிலத்தடி நீர் கடுமையாக உறிஞ்சப்படுகிறது.

ஆறுகளில், குளம் - ஏரிகளில் நீரில்லாமைக்கு மழையின்மையே முதல் காரணமாகும்.

மழையின்மைக்கு மேலே குறிப்பிட்ட 'குமுக'க் காடுகள் (அஃதாவது யூக்லிப்டசு, கருவேலம் போன்ற முதலாளிகளின் தொழிலக நலனுக்கான மரங்களை நடுவதும்) வளர்ப்பதும் வளமான பகுதிகளில் பிற முதலாளிய வளத்திற்கான தொழிலகங்கள் நிறுவுவதும் ஆகும்.

மக்கள் மீதோ, நாட்டின் மீதோ சிறிதும் அக்கறையில்லாத அரசும் நிலத்தடி நீரைத் தோண்டி எடுத்துக் கொடுக்கிறது.

நிலத்தின் தன்மையை அறிவியல் முறைப்படி பார்க்கப்போனால், நிலத்தடி நீர் தோண்டி எடுப்பது என்பது மிகவும் கொடியது.

அதனால் நிலம் முழுமையாக வறட்சியும், நில வெடிப்புகளும் ஏற்படுவதோடு, நிலமே படிப்படியாகக் கடல் மட்டத்தைவிடக் குறைந்து, நிலத்தைக் கடல் மூடுகிற கொடிய நிலைக்குக் கொண்டு வந்துவிடும்.

இ்து ஏதோ பூச்சாண்டிக் கதையன்று.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட 'சங்காய்' (சீனு) நகரத்தில் நடந்த நிகழ்ச்சியே.

அங்கு நிலத்தடி நீர் கடுமையாக உறிஞ்சியே பயன் படுத்தப்பட்டது.

அதன் விளைவாக நகரமே நிலத்திற்குள் புதைந்து கொண்டு இருந்தது. இதன் விளைவை உணர்ந்து கொண்ட சங்காய் பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் நிலத்தடி நீர் உறிஞ்சப் படுவதை உடனே தடைசெய்தனர்.

வெளியிடங்களிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டி, உயர் அழுத்ததில் நிலத்திற்குள் நீரைப் பாய்ச்சினர்.

இதன் வழியே நிலத்திற்குள் ஊர் புதைகிற நிலை நிறுத்தப்பட்டு, முந்தைய அளவைவிட மூன்று மாத்திரி (மீட்டர்) உயரம் அதிகமாகியது.

—இது போன்று இவ் வுலகின் பிறபகுதிகளில் நடந்த படிப்பினையை வைத்துக் கொண்டே நாம் இந்தக் கூப்பாடு போட வேண்டியுள்ளது.

இந் நிலையில்,

நாடு வறண்டு கொண்டிருப்பதற்கு உதவுவதாகக் கூறுகிற இன வெறி பிடித்த இராசீவ் அரசு, ஒரு பக்கம் மக்களிடமிருந்து 500—கோடி உருபாக்கள் வரித்திணிப்பைச் செய்தும், மறு புறம் ஏதோ சில்லறைத் தனமான வறட்சி மாற்றுப் பணி செய்வதாகவும் அறிவித்திருப்பது அரசின் பணக் கொழுப்பெடுத்த வெறித்தனத்தையே காட்டுகிறது.

மேலும், வேள்வி என்று அரை 'அம்மண' முண்டங்கள் கத்துகிற கத்தல்களுக்கு, அதிகார வெறியினர் துணைநின்று செலவழிப்பதும், இந்தக் கும்பல்களில் கூட்டுக் கொள்ளைத் திட்டமே தவிர வேறன்று.

எனவே,

நம் மீது இந்த அதிகாரப் பிரிவினரும், பணவெறி பிடித்த முதலாளிகளும் திணிக்கின்ற தொழில்களை நாம் தூக்கி எரிந்துவிட்டு, நமக்குத் தேவையான விளை பொருள்களை விதைத்து, நமக்குத் தேவையானதை நாம் பெற்று உண்போம்!

நாம் எதற்கு, நம்மை ஆளுமைப் படுத்தி அடிமைப் படுத்தியுள்ள அதிகார வெறியர்களுக்கும், பிற இன வெறியர்களுக்கும் உழைத்துக்கொட்ட வேண்டும்?

கொழுப்பெடுத்துத் திரிகிற இந்த அரசு, அதிகார, முதலாளிய, மத வெறியர்களைப் புறக்கணிப்போம்.

நாம் நமக்காக உழைப்போம்!

நம் நிலத்தில் நமக்குத் தேவையான, நம் நிலத்திற்குத் தேவையான, நம் நிலத்தில் மழைக்குத் தேவையானவற்றை வளர்ப்போம்!

நமக்குத் தேவையற்ற, நம் நிலத்திற்குத் தேவையற்ற பயிர்களை, மரங்களை வெட்டி வீழ்த்துவோம்! இல்லையேல், வறண்ட தமிழ்நாட்டில் 'பஞ்சப் பராரியாக' இன்றைக்கு நாம்திரிவதிலிருந்து நாளை, இந்தப் பணக்கொழுப்பெடுத்த வெறியர்களாலும், ஆளுமை வெறியர்களாலும் இந்தத் தமிழ் நாடே கடலுக்குள் மூழ்கிப் போகிற இக்கட்டில் தள்ளப் படும் என்பது உறுதி! உறுதி!

**—விடுதலை வேட்பன்.**

## வறட்சிக்குக் கூடுதல் வரி போட்டு மக்களைச் சாறு பிழிவதை விட வரவேண்டிய வரிகளைப் பண முதலைகளிடமிருந்து தண்டினல் என்ன?

அன்றாடம் கூலிக்கு உழைத்து உண்ணச் சரியான உணவில்லாமலும், உடுக்கப் போதிய உடை இல்லாமலும், இருக்கச் சரியான குடில் இல்லாமலும் தவிக்கும் ஏழை, எளிய மக்களிடம் வீட்டு வரி செலுத்த வில்லை; விளக்கு வரி செலுத்த வில்லை; தண்ணீர் வரி கட்ட வில்லை 'என்று கூறி, வீட்டுப் பொருள்களைப் பறிமுதல் செய்து கொண்டு போகும், இம் முதலாளிய அரசுக்கு, வரி ஏப்பம் போடும் பெரும் பண முதலைகள் கோடிக்கணக்கான உருபாக்கள் வரி செலுத்தாமல் ஏமாற்றி வருவது தெரிவதில்லையா? அல்லது தெரிந்தும் அவர்களை அண்டுவதற்கு அச்சமா?

மேலும் இப்பொழுது நாடடிலுள்ள வறட்சியைப் போக்குவதற்காகப் புதுப்புது விற்பனை வரிகளைப் போடுகின்ற அரசுக்கு நிலுவையிலுள்ள இந்த வரிகளெல்லாம் கண்ணுக்குப் படுவதில்லையா?

ஏராளமான வரிகளைக் கொடுக்காத கொடாக் கண்ட பண முதலைகளும் அவர்கள் கொடுக்க வேண்டிய வரிகளும் வருமாறு:

1. விஜேத் குமார் அத்வானி - 16 கோடி.
2. சுகார் நரராயணன் - 13 கோடி.
3. தர்ம தேசா - 10 கோடி.
4. அரிதாசு முத்திரா - 8.5 கோடி.
5. எசு. என். மாறன் - 7.5 கோடி.
6. கன்மால்சீ - 7 கோடி.
7. பயானி - 4 கோடி.
8. பானுபாய் படேல் - 4 கோடி.
9. சுந்தர் தாம் பானிக் - 3 கோடி.
10. ஐதர் அலி - 3 கோடி.

இந்தப் பத்துப் பெரும்புள்ளிகளிடமிருந்து மட்டும் மொத்தம் 80 கோடி உருபாக்கள் வரி செலுத்தப் படாமல் உள்ளது. இவர்கள் அரசை ஏமாற்றிக் கொண்டிருக்கிறர்கள். இவர்களுக்குப் பறிமுதல் நடவடிக்கை, வழக்கு முதலிய கடுபிடி முறைகள் கையாளப் படுவதில்லையா? இவர்கள் அரசுக்கு வேண்டியவர்கள். அரசுக்கு வேண்டியவர்கள் என்றல் எப்படி வேண்டுமானுலும் அரசை ஏமாற்றலாம் போலும்! **—தமிழ் வென்றி.**

# இராசீவ்காந்தி நலத்துக்காக இரண்டு பெரிய வேள்விகள்!

நாட்டு மக்கள் நலனுக்காக என்று கூறிக் கொண்டு, இராசீவ் காந்தி நலம்பெற வேண்டும் என்று அண்மையில் தில்லியில் இரண்டு பெரிய வேள்விகளை(யாகங்களை)ச் செய்திருக்கின்றனர், அரசைச் சார்ந்தவர்கள். மக்களின் வரிப்பணம் எந்தெந்த வகையில் பாழடிக்கப் பெறுகின்றது என்று நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

தில்லி, 'சப்தர்சங்' வீதி 15-ஆம் எண் குடியிருப்பில் இந்த வேள்வி நடந்தது.

இதன் பொருட்டு, பெங்களூரிலிருந்து தனிச் சிறப்புத் தொடர் வண்டியில் 200 புரோகிதர்கள் தில்லிக்கு அழைத்து வரப் பெற்றனர்.

அவர்களுடன் சமையல்காரர்கள் பலர், நாதசுரக் குழுவினர், தொலைக்காட்சிப் படப்பிடிப்புக் குழுவினர் என்று சிறியதொரு கூட்டமே தில்லி வந்திருந்தது.

வேள்வியை நடத்த 10 ஆயிரம் தேங்காய்கள், ஏறத்தாழ 2,250 கிலோ தூய்மையான ஆவின் நெய் தில்லிக்குக் கொண்டு வரப் பெற்றன.

பூசைக் கென 4000 உருபா மதிப்புள்ள பூக்கள் நாள்தோறும் வானூர்தி வழியாகத் தில்லி வந்திறங்கியது.

வேள்வியில் ஈடுபட்ட புரோகிதர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 உருபா முதல் 250 உருபா வரை காணிக்கையாக வழங்கப் பெற்றிருக்கின்றது.

இது தவிர ஒவ்வொருவருக்கும் ஒரு பட்டு வேட்டி, பட்டு மேலாடை, இரண்டு இணை நூல் வேட்டிகள், துண்டுகள் ஆகியவையும் தரப்பெற்றிருக்கின்றன.

புரோகிதர்கள் தில்லியில் பல்வேறு உயர்விடுதிகளில் தங்க வைக்கப் பெற்றுள்ளனர். வேள்வி நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர மூர்த்தியின் வளமனைக்குப் புரோகிதர்கள் நாள்தோறும் சிறப்புப் பேருந்துகளில் மிகுந்த பாதுகாவலுடன் அழைத்து வரப்பெற்றனர். வேள்வி முடிந்த பிறகும் அப் புரோகிதர்களும் அவர்களுடன் வந்த பிறரும் தில்லி நகரைச் சுற்றிப் பார்க்கவும், அரித்துவாரம், ரிசிகேசம் ஆகிய புண்ணிய இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன.

வேள்வி நடந்த இடத்திற்குத் தலைமையமைச்சர் வந்து வேள்வியைத் தொடங்கி வைக்க ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன. ஆனால் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக அவ்வேற்பாடு தவிர்ந்து போய், வேள்வி செய்த புரோகிதர்களே தலைமையமைச்சரின் இல்லத்துக்கே சென்று அவருக்காகச் சில சடங்குகளைச் செய்துள்ளனர்.

இந்த வேள்வியின் ஒரு பகுதியாக ஓர் இலக்கம் கொழுக்கட்டைகள் பிள்ளையாருக்குப் படைக்கும் 'லட்ச மோதக கணபதி ஓமம்' என்னும் வேள்வியும் நடத்தப் பெற்றது.

இந்த வேள்வியைத் தலைமை தாங்கி நடத்திய சாமா பட் என்பவர், இது போன்ற மிகப் பெரிய வேள்வி வட மாநிலத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகே நடத்தப் படுவதாகவும், மகாபாரதப் போருக்குப் பிறகு தருமரின் நலனுக்காக யுதிட்டிரர் நடத்திய அரசசூய வேள்விக்குப் பிறகு நடத்தப்படும் பெரிய வேள்வி இது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வேள்வியில்லாமல், குருசேத்திர நகரில் சில அனைத்துலகத் தரகு வாணிகங்களில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படும் சந்திரசுவாமி என்பவரும் 'சகச்ர சண்டி மகா யக்ஞம்' என்னும் ஒரு பெரும் வேள்வியையும் 51 புரோகிதப் பண்டிதர்களைக் கொண்டும் நடத்தினர் என்றும் கூறப் பெறுகிறது.

'நீர்ச்சீலை' (கோவணம்) கட்டாத ஊரில், நீர்ச்சீலை கட்டியவன் பித்தன்' என்னும் பழமொழிப் படி நாடு நடந்து போய்க் கொண்டுள்ளது.

---

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தையும் ஒன்று திரட்டினர். எனவே அவருடைய தொகுப்பே சிந்து வெளி முத்திரையின் இது வரை வந்த வற்றில் இறுதியான கணிப்பொறிப் பட்டியலாகும். இருப்பினும் இந்தச் சிறந்த பட்டியல் தொகுப்பினாலும் சிந்து முத்திரையின் சொந்தக்காரர்களை நிறுவமுடியாமல் இருந்தது.

இதன் முயற்சியில் நியூயார்க் அருங்காட்சியக இயற்கை வரலாற்றுத் துறையின் பணியாற்றும் முனைவர். வால்டர் பேர் சர்விசு ஈடுபட்ட போது அவர், "கணிப்பொறியைப் பயன்படுத்தி இவ்வெழுத்துகளைக் கண்டறியும் முயற்சியில் கணிப்பொறி உதவுவதைவிட அது கொடுக்கும் தொல்லைகள்தாம் ஏராளம்" என்று குறிப்பிட்டார். ஏனெனில் கணிப்பொறிகள் எழுத்துகளை அடையாளம் கண்டு பிடிக்கும் எல்லையை அடிக்கடி நழுவ விட்டுத் தாண்டிப் போய்விடுகின்றன என்று அவர் கூறினர்.

—தொடரும்

---

**தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு தருவதே, தமிழகத் தமிழர்களின முதல் கடமை!**

# சாதி உணர்வா? உரிமை உணர்வா? எது தேவை?

- மா. செ. தமிழ்மணி.

சாதி அமைப்புகளின் எண்ணிக்கை நாளுக்கு ஒன்றாக வளர்ந்து வருகின்றது. கட்சிகளின் தோற்றங்களும் இவற்றுடன் போட்டி போட்டுப் பெருகுகின்றன. இந்நிலை தமிழ் நாட்டில் மட்டும் அன்று இந்தியத் துணைக் கண்ட முழுமையிலுமேதான்!

ஏன் சாதி அமைப்புகளும் கட்சிகளும் பெருகுகின்றன? மக்கள் ஏன் இவற்றிற்கு ஊக்கம் தருகின்றனர்? உயிரையும் தந்து வளர்க்கின்றனர்?

தத்தம் எதிர்கால இன்பங்களுக்கு இவ்வமைப்புகள் எந்த வகையிலாவது துணைபுரியாதா என்ற அங்காப்புதான். ஏன் இவ்வாறு அங்காந்து கிடக்கின்றனர் மக்கள்?

தம் கண்ணெதிரில் குமுகத்தின் ஒரு பிரிவினர் வாய்ப்புடன் வாழ்வதும், தமக்கு மட்டும் எதுவுமே இல்லை என்று இருப்பதான நிலையும்தான் மக்களின் இந்த எழுச்சிக்குக் கரணியம்.

இவ்வாறு தனக்கு எதுமே இல்லை எனும் இவ்வடிநிலை மக்களைப் பயன்படுத்திக் கட்சி, சாதி அமைப்புகளின் தலைவர்கள் அல்லது வழிநடத்தும் குழுவினர் பொதுத்தொண்டு செய்வதாகப் புறப்பட்டாலும் இறுதியாகத் தாம் மட்டும் பயன்களைப் பெற்றுக் கொண்டு தமக்கு ஆதரவாக வந்த மக்களைப் பழைய்படி என்றும் இல்லாதவர்களாகவே விட்டு விடுகின்றனர்.

இதுதான் நாற்பது ஆண்டுக்கால "பாரத"த் திருநாட்டின் அழகு.

இல்லாத வறுமைநிலை என்புதை எப்படிப் போக்கிக் கொள்ளலாம் என்று இந்தப் பெரும்பான்மை மக்களுக்கு எண்ணிப்பார்க்கக் கூட நேரம் இல்லை. அப்படி அவர்களின் அன்றாடத் தேவைகள் அவர்களை நெருக்குகின்றன. அல்லது அப்படி எண்ணும் அறிவுத்திறன் பெறும் அளவில் அவர்கள் கல்வி பெறுமல் உள்ளனர்.

அறிவு, பொருள் ஆகியவற்றில் வறியவர்களாய் மக்களை வைத்திருக்கவே அனைத்துச் சாதி, கட்சி அமைப்புகளும் விரும்புகின்றன. ஏன் எனில் அப்போதுதான் முதலில்லா நல் வாணிகத்தால் தாம் கொழுக்க முடியும்.

இந்த நிலைகளை மக்களிடம் எடுத்து விளக்கி மக்களை ஓரணி திரட்டப் புறப்படும் தூய இயக்கங்கள் பல இருப்பினும் அவை வலிமை அற்றே இருக்கின்றன. ஏன்?

முன் சொன்னது போல் சாதி, கட்சி உணர்வுகள் மக்களை விட்டு நீங்காமையே கரணியம்.

எடுத்துக் காட்டுக்கு அண்மையில் நடந்து முடிந்த 'வன்னியர்' போராட்டத்தையே சற்று கூர்ந்து நோக்காமலே பொதுவாகப் பார்த்தாலே இவ்வுண்மை விளங்கும்.

இக்குமுகத்தினரில் ஒன்று அல்லது அதற்குக் குறைந்த விழுக்காட்டினர் தவிர்த்து மற்றவர் அனைவரும் உழைக்கும் மக்கள். அதிலும் நிலையான வருவாய் அற்ற உழவுப் பணி செய்பவர்கள். உழவுப் பணியில் குடும்ப உறுப்பினர் அனைவரும் ஈடுபட்டு உழைக்க வேண்டும் எனும் கட்டாயத்தில் உள்ளவர்கள்.

இப்படி வருமானமே தராத ஒரு தொழிலைச் செய்து வரும் இவர்களின் மக்கள் உழைக்கவும் வேண்டும்; கற்கவும் வேண்டு . எப்படி இருக்கும் இவர்களின் கல்வி?

இடைநிலைக் கல்வியைத் தாண்டுவது என்பது பெரும் பாலோர்க்கு முடியாததாகின்றது. இந் நிலையில் பட்டம், மேற்பட்டம் என்றெல்லாம் படிப்பதும் எப்படி? பதவி பெறுவதும் எப்படி?

மேல் தட்டில் வாழுகின்ற தலைமுறையாக மிகுதியான சொத்துடைமை பெற்ற வன்னியர் மட்டுந்தாம் படித்திருக்க முடியும். பதவியைப் பெற முயற்சி செய்ய முடியும்.

இக்குமுகத்தினர் போராட்டத்திற்கு முன் பட்டியல் இட்டுக் காட்டி இருந்த பதவிகளைப் பார்த்தலே தெரியும், அப்பதவிகளைப் பெற யாரால் முடியும் என்பது. பிறபணக்காரச் சாதியினருடன் தொடர்பு கொண்ட வன்னியர்கள் மட்டுமே, நிலத்தில் இறங்கி உழாமல், நீர்பாய்ச்சாமல், களை எடுக்காமல், இழப்புக்கு ஆளாகாமல் உள்ள மேல்தட்டு வன்னியர் மட்டுமே பெறக்கூடிய பதவிகள் அவை.

(அப்படிப்பெற்று வந்த பின் அவர்கள் எந்த அளவிற்குத்தாம் சொல்லி வந்த தம்மைச்சார்ந்த சாதியினர்க்குத் துணை ஆகின்றூர் என்பது வேறு.)

இப்படி ஒரு விழுக்காட்டினர் அளவு வன்னியர் பதவிபெற்றுப் பெருவாழ்வு வாழ, பெரும்பான்மை உழைக்கும் மக்களில் நூற்றுக்கணக்கானோர் உயிர் இழந்தனர்; ஆயிரக்கணக்கானோர் அடி உதை பட்டனர்; சிறையும் புகுந்தனர்.

தமிழ்நாட்டில் பெருமளவில் வாழ்வதாகக் கூறிக்கொள்ளும் இம் மக்களின் வளமான வாழ்வில் உண்மையான தூய நெஞ்சுணர்வு இச் சாதித் தலைவர்கட்கு இருப்பதானல இவர்கள் செய்திருக்க வேண்டிய முதற்பணி எனை?

**உழவுப்பணிக்கு உறுதியான வருவாய் வழிக்கான போராட்டமாக அமைத்திருக்க வேண்டும். நிலம் இல்லாதவனுக்கு நிலம் கிடைக்கச் செய்திருக்க வேண்டும். நிலம் உடையவனும் இடர்**

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இல்லாது உழவுசெய்ய நீர்ப்பாசனத்திற்கு வழி கண்டிருக்க வேண்டும். விளைவிக்கும் பயிர்க்கு இடும் உரங்களில் அடிக்கும் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி இருக்க வேண்டும்.** பூச்சி மருந்து என்று சொல்லி உழவனைக் கொல்லும் மருந்துக் கொள்ளைக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் முகாமையாக விளைவித்த பொருள்விற்பனையில் இடைத் தரகர்களை நீக்கி விளைவிப்போரே விலைகுறிக்கும் நிலைக்கு வழி கண்டிருக்க வேண்டும்.

செய்யும் தொழிலில் கட்டுப்படியாகும் உறுதியான வருவாய்க்கு வழிசெய்ய மக்களை அணிதிரட்டி இருந்தால் இவர்கள் தொண்டைப் புரிந்து கொள்ள முடியும். இதற்கென இத்துணை இழப்புகளை இந்த மக்கள் இப்போதைக்கு இழந்தாலும் தகும்.

சாதி உணர்வு எனும் பொய்உணர்வால் மக்களை அழிப்பது என்பது பெரும் கொடுமையிலும் கொடுமை.

இப்போராட்டத்தை முன்னின்று நடத்திய தலைவர் ஒருவர் தம் சொந்த உழைப்பையே சங்கம் கட்டப் பயன்படுத்துகின்றார் என்பது பெருமைக்குரிய செய்தியே. ஆனால் அ்து அம் மக்களின் நிலையான மகிழ்வுக்கு ஆன செயலானால் சரி.

இத் தலைமுறையிலாவது தமிழகத்து உழைக்கும் மக்கள் தம்தம் கட்சி, சாதி அமைப்புகளின் தலைவர்கள் எனப்படும் மேல்தட்டு மக்கட்கு இரையாகாமல் அவர்களின் வழிகாட்டுதல்களில் உள்ள குறைகளை நீக்கித் தமக்குள் ஒன்றுபட்டு அணி திரண்டால் முடியாதது எதுவும் இல்லை என்பது உண்மை யான செய்தி.

ஒருகிழமைக்குச் சாலை என்ன, தொடர்வண்டி, விண்ணூர்தி, பேருந்து எதுவுமே ஓடாத நிலையை உருவாக்கிக் காட்டி தம் கோரிக்கைகளைத் தாமே பெறும் நாள் வந்து சேரும்.

அதற்கு உழைக்கும் அத்தனை மக்களும் அணி திரளல் வேண்டும். **கட்சிகளைப் புறக்கணிக்க வேண்டும். சாதிகளைப் புதைத் தொழிக்க வேண்டும்.** மதங்களை மாய்த்திட வேண்டும்.

மக்களின் இப்பணியைச் செவ்வனே செய்யும் இயக்கங்களும் ஒருவரை ஒருவர் இழிவாக்கும் அறியாமையை விளக்கிக் கொண்டு ஒத்த பொதுநோக்கில் ஒன்றிணைந்து பாடாற்ற வேண்டும்.

அப்போது வல்லரசின் அனைத்து அடக்குமுறைகளும் அற்று, உரிமை வாழ்வு அனைத்து மக்களுக்கும் வரும் என்பதுதான் உண்மை, உண்மை, உண்மை! O

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கின்றனர். எனவே, பொதுமக்களுக்கு உண்மை தெரிய வழியில்லை!

இப்பொழுது தொடங்கியுள்ள தமிழீழப் போர் தமிழினப் போரே!

இதில், தமிழினத்தின் ஒருபகுதி அழியநேரிட்டாலும், உலகிலுள்ள அத்தனைத் தமிழர்களும் உணர்ச்சி பெறுவது திண்ணம்.

**இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுக் காலமாக நடக்கும் இனமீட்புப் போரில் இத்தனைப் பேர்களாகிலும் சாவாமல் இருத்தல் முடியாது; இதில் வியப்பொன்றும் இல்லை!**

**இனியும் நாம் தப்பிப் பிழைத்துத் தம்பிரான்களுக்கு அடிமையாக இருக்க வேண்டுமா என்பதே கேள்வி.**

நாம் கூறும் ஒவ்வொரு சொல்லும், செயலும் விடுதலைப் புலிகளுக்கு நாம் கையெடுத்துத் தரும் அதரவுக் கருவிகள்!

விடுதலைப் புலிகளின் வீரத்துக்கு நாம் தோள் கொடுப்போம்! இங்கும் அத்தகைய போராட்டத்தைத் தோற்றுவிப்போம்!

இந்திய அரசின் பசப்புரைகளைப் போராளிகள் துளியும் நம்ப வேண்டாம்!

போர் தொடரட்டும். தமிழினம் பொங்கி எழட்டும்!

வாழ்க தமிழினம் மீள்க தமிழ்நாடு!

(பாவலரேறுவின் இவ் வறிக்கையை அங்காங்கு 10000, 20000 — என்று அச்சிட்டு ஊர் முழுவதும் நாடு முழுவதும் எவ்வெவ் வகையில் முடியுமோ அவ்வவ் வகையில் பரப்பி விடுங்கள்!)

---

(12-ஆம் மக்கத் தொடர்ச்சி)

**சூடும் சொரணையும் மானமும் வீரமும்**
**கொள்! கொள்! கொள்? —நீ**
**சீற்றங் கொண்ட வேங்கைப் புலியென**
**நில்! நில்! நில்!**
**நாடெம் நாடு! நட! நட! வடவா!**
**என முழங்கு! — அவன்**
**நடந்திட மறுத்தால் உடனே விடுதலைப்**
**போர்தொடங்கு! (இ)**

**இடியாய்க் கனலாய் எரிமலை யாக**
**நீ'மாறு — உடன்**
**இடித்தே கனன்றே வெடித்தே சீறிப்**
**போராடு!**
**கொடியோர் வடவர் வல்லா ளுமையைத்**
**தூளாக்கு — நம்**
**கனித்தமிழ் நாட்டை முழுத்தன் உரிமை**
**நாடாக்கு! (இ)**

-பாவலர்- சின்னப்பனார்.

Scanned with CamScanner

# முரணான ஒப்பந்தம்!

இந்திய அரசியல் பிக்கல் பிடுங்கல்களை மறைக்கும் திட்டமாக உருவாக்கப்பட்ட இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் அரசியல் பின்பாட்டுக் காரர்களை யெல்லாம் நிலையாகவே வாய மூட வைத்து விட்டது. தப்பித் தவறி வாய்திறந்தவர்கள் பதவிகளைத் துறந்தவர்களாகவே ஆயினர்.

தமிழீழ மக்கள் இலங்கைச் சிங்களப் படையினரால் கொன்று குவிக்கப்பட்ட நிலையில் இந்திய ஆரியப் படையும் கடந்து சென்று தங்களின் நெடுநாள் போரின்மை வெறியைத் தீர்த்துக் கொண்டு வருகிறது. இந் நிகழ்ச்சியும் எதிர்பார்க்கப் பட்டதே. மேலும் எதிர்பார்த்த காலத்தினும் பிந்தி நடந்தது என்றும் கூறலாம். தமிழ் நாட்டை ஆளும் தலைவர்களும் தமிழினத் தலைவர்களும் அமைதி நோன்பு நோற்கும் நிலை தமிழினத்திற்குப் பல அவல நிலைகளுக்கு மேல் ஏற்படும் அவல நிலையாக ஏற்பட்டுள்ளது.

'தமிழீழப் போராளிகளைத் தமிழர்கள் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது' என்பது இராசீவின் இடைச் செறுகல். சுரணையற்ற - வாய் மூடியினத்தில் சிலர் மட்டும் கருவியேந்துதலை அவர் இவ்வாறு கணிக்கிறார் எனக் கூறலாமா?

இரு எதிரிகளிடையில் மீண்டும் இயைந்து வாழ்வதற்குரிய வரையறைகளை ஒத்துக்கொண்டு வாழ வகைசெய்வது ஒப்பந்தம் எனக் கொள்வோம். இவ் விருவர்களிடை ஒப்பந்தம் ஏற்பட, சந்து செய்ய, சான்றாக அமைய இடையில் யாரேனும் இருப்பதுண்டு. ஆனால் ஒப்பந்தம் என்பது எதிரிகளிடையே தவிர ஓர் எதிரிக்கும் நடுவில் நிற்பவர்க்கும் இடையில் நடக்காது.

அதே வகையில் இப்போது இந்திய இலங்கை ஒப்பந்தம் நடக்க வேண்டியது சிங்கள அரசிற்கும் தமிழீழத் தலைவர்களுக்கும் இடையில். நடுவில் நின்றதோ இந்திய அரசு. நடந்த ஒப்பந்தமோ இந்தியத் தலைமையமைச்சர்க்கும் இலங்கைச் சிங்களக் குடியரசுத் தலைவர்க்கும் இடையில். எனவே இது ஒப்பந்தம் என்பதா? இது சூழ்ச்சித்திட்டமாக இருக்கவே வாய்ப்புள்ளது.

அதற்குப்பின் நடந்த நிகழ்ச்சிகளோ அதை உறுதிப்படுத்துகின்றன.

தமிழீழப் புலித்தலைவர் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டதாக ஒரு நாடகம் — அமைதிப் படை என்ற பெயரில் வலுவான கருவிகளுடன் இந்தியப் படை இலங்கைக்குச் சென்றது. இலங்கை மக்கள் இன்புற்று அமைதியாக வாழத் தொடங்கியதாகத் தொலைக்காட்சிக் கற்பனை நாடகங்களுக்கிடையில் அடிக்கடி ஒளி பரப்புதல் நடைபெற்றது. அனைத்துப் பிரிவினரும் கருவிகளை ஒப்படைப்பதாகத் தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

படிப்படியாக இலங்கைப் படைக்குப் பணிச்சுமை குறைந்தது. இந்தியப் படை அப்பணிகளை ஏற்றுக் கொண்டது. போராளிகள் இருதலைக் கொள்ளிகளாயினர். ஒப்பந்தத்தின்படி அனைத்தும் சரியாக நடந்து வருகின்றன.

சந்து செய்ய வந்தவர் ஒப்பந்தப் படி எதிரி நாட்டிற்குத் துணை போனார். ஒரு தலைப் பக்கமானார். மறுபக்கத்தலைகளை வெட்டி வீழ்த்தி வருகிறார். தமிழினத்தை அழிக்கத் தமிழகத் தமிழனின் வரிப் பணம் பயன்படுகிறது. கேட்பதற்கு யாருமில்லா ஏதிலியினமானோம். தமிழினத்தின் அவலத்தை எடுத்துரைக்கும் தலைவரில்லா இனமானோம்.

அவ்வப்போது தமிழ் நாட்டிற்கும் ஓர் அரசுண்டு. அதற்கும் முதலமைச்சர் ஒருவருண்டு என்ற படி ஒரு சில வெற்றறிக்கைகள் அமெரிக்காவிலிருந்து வந்ததாகச் செய்தித்தாள்கள் நினைவூட்டி வருகின்றன. புலிகள், போராளிகள் என்ற சொற்கள் படிப்படியாக வன்முறையாளர்கள், தீவிர 'வாதி'கள் என்று மாற்றப்பட்டு வருகின்றன.

இந்திய அமைதிப் படையால் இலங்கை இனி அமைதி(!) நாடாக மாற்றப்பட்டு விடும் என்பது உறுதி.

புத்தம்(!) சரணம் கச்சாமி!

# அரசு வண்டியா? அக்ராகர வண்டியா?

தொண்டை நாட்டின் தலைநகராக விளங்கிய காஞ்சி புரத்தில் ஓரிடம் **'கங்கை கொண்டான் மண்டபம்'** என்று அழைக்கப் படுகிறது. அவ்விடத்தில் "இந்து சனாதன"த்தின் காவலர் சங்கராச்சாரியாரின் மடம் அமைந்துள்ளது. அவ்வழியே செல்லும் பட்டுக்கோட்டை அழகிரி பேருந்துத் தடங்களில் சில மாதங்களாக, **வழி - சங்கர மடம்** எழுதப் பட்டுள்ளது. தனியார் பேருந்துகளில் **'கங்கை கொண்டான் மண்டபம்'** என்றே உள்ளது. தமிழன் தனக்கு என்றே இருந்த பெருமையினைக் கூடக் காத்துக் கொள்ளாது, தான் அடிமைதான் என்று பறைசாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான், என்பதற்குத் தமிழக அரசே சான்றாக உள்ளது. சங்கர மடத்தின் வழியாகவும் அதைக் காட்டுகிறது, அரசு. அரசுக்குப் பின்னணியில் ஆரியம் வேலை செய்கிறதோ?

—தமிழ் - முகிலன்.

Scanned with CamScanner

# விரைவில் விடுதலை பெறவேண்டும்!

இங்கே விரைவில் விடுதலை நாம்பெற்
றிடவேண்டும் — இன்றேல்
என்றும் மீளா அடிமை என்றுணர்ந்
திட வேண்டும்!
பொங்கி வெகுண்டு புயலாய்க் கிளம்பிடத்
தான் தேண்டும் — தரை
எங்கும் நமது விடுதலைக் குரல்கேட்
டிட வேண்டும்! (இ)

வடவன் இன்று நமதினம் அழிக்கத்
துணிந்திட்டான் — அதற்கு
வேண்டும் திட்டம் தீட்டிச் செயல்பட
முனைந்திட்டான்!
அடாத செயலைச் செயவும் அவன்மனங்
கொண்டிட்டான் — நம்மை
அழித்தே தீர்வது என்றே முடிவுக்கு
வந்திட்டான். (இ)

ஈழத் தமிழர் விடுதலை பெறுவதைத்
தடுத்திட்டான் — தன்
இந்தியப் படையை அனுப்பி நம்குடி
கெடுத்திட்டான்.
ஆழச் சிந்தனை செய்தே பார்! பார்!
நீயிதனை — என்ன
ஆணவம் இந்த வடவன் தனக்கு
என்பதனை! (இ)

படையைக் கொண்டு புலிகளின் கருவிகள்
பறித்திட்டான் — நம்
பைந்தமிழ் இனத்தின் உரிமைப் போரில்
குறுக்கிட்டான்!
அடக்கிச் சிங்களர்க் கடிமைக் குடியாய்ச்
செய்திட்டான் — வல்
ஆட்சி தன்னிடம் இருக்கிற தென்ற
திமிரில்தான். (இ)

தமிழினக் கொலையைத் தடுத்திடப் படைதர
மறுத்திட்டான் - இன்று
தன்னினங் காக்கத் தன்படை அங்கே
நிறுத்திட்டான்.
நமதினத் தனித்தன் னாட்சி மலர்வதைத்
தடுக்கத்தான் — அவன்
நயமை இன்றி வலியச் சென்றே
தலையிட்டான். (இ)

வெற்றிக் கனியை எட்டிப் பறிக்கும்
வேளையிலே — அதைத்
தட்டிப் பிடுங்கித் தந்தான் சிங்களர்
கையினிலே!
முற்றிய இனவெறி கொண்டே விட்டான்
வடவன்தான் — கை
கட்டியே சும்மா இருந்தால் நம்மினம்
இல்லைதான். (இ)

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 93. TN/MS (C) 657

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 12

தமிழினத்துக் கென்று ஒருநாடு அமையவில்லையானல், இவ்வினம் முன்னேற வழியே இல்லை என்பதை அறிக.

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5